**செய்தி வெளியீடு எண்: 180** **நாள்: 16.03.2013**

<u>பத்திரிக்கை செய்தி</u>

மூலக்கடை சந்திப்பில் தமிழக அரசு, நெடுஞ்சாலைத்துறையினரால் மேம்பாலம் கட்டும் பணி நடைபெற்றுவருவதால் போக்குவரத்து காவல் துறையின் ஒத்துழைப்புடன், போக்குவரத்தில் பின்வரும் மாற்றங்கள் 18–03–2013 முதல் அமுல் செய்யப்படுகிறது. சென்னையிலிருந்து மூலக்கடை வழியாக GNT ரோட்டில் மாதவரம் ரவுண்டானா மற்றும் செங்குன்றம் நோக்கி சென்னை நகரை விட்டு வெளியே (outgoing) செல்லும் வாகனங்கள் மட்டும் மூலக்க்டை சந்திப்பு வழியாக எப்போதும் போல் செல்லலாம்.

செங்குன்றம் GNT ரோடு மற்றும் மாதவரம் ரவுண்டானா வழியாக சென்னை நகருக்கு உள்ளே (incoming) வரும் வாகனங்கள் மூலக்கடை சந்திப்பை தவிர்த்து GNT ரோட்டில் உள்ள தட்டாங்குளம் சந்திப்பில் இடது பக்கம் திரும்பி தட்டாங்குளம் சாலையில் பயணித்து MRH ரோட்டில் நகராட்சி அலுவலகத்தில் வலதுபுறம் திரும்பி மாதவரம் – ரெட்உறில்ஸ் ரோடு வழியாக சென்று தண்டையார்பேட்டை நெடுஞ்சாலை வழியாக எத்திராஜ் சுவாமி சாலையில் வலதுபுறம் திரும்பி பவித்ரா மருத்துவமனை வழியாக சென்று மீண்டும் GNT ரோட்டை அடையலாம்.

## பொதுமக்களும் வாகன ஓட்டிகளும் சிரமம் பார்க்காமல் ஒத்துழைப்பு நல்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை-9**